# இந்தியா பெந்தெகொஸ்தே தேவசபை

## THE INDIA PENTECOSTAL CHURCH OF GOD

## தமிழ்நாடு | TAMIL NADU


**Pr. Dr. KINGSLY CHELLAN**
PRESIDENT
PHONE : +91 94882 74557
ADDR : 27/6B BETHANY, MARTHANDAM KANYAKUMARI DISTRICT, TAMILNADU INDIA - 629 165

**Pr. C. SUNDARRAJ JOHNSON**
VICE PRESIDENT
PHONE : +91 94444 71684
ADDR : NO.44/18, V.P.N. COLONY MAINROAD KANNIGAPURAM, CHENNAI, TAMILNADU, INDIA - 600 012

**Pr. S. SOLOMON**
SECRETARY
PHONE : +91 94431 95225
ADDR : CHENTHARAVILAI, ATTOOR, KANYAKUMARI DISTRICT, TAMILNADU INDIA - 629 177

**Pr. JOY ARULRAJ**
JOINT SECRETARY
PHONE : +91 98945 66854
ADDR : ASARIPALLAM, PERVILAI PO NAGERCOIL, KANYAKUMARI DISTRICT TAMILNADU, INDIA - 629 003

**Bro. A. RUBAN**
JOINT SECRETARY
PHONE : +91 98400 91423
ADDR : NO. 16, 1ST STREET, SUBRAMANIPURAM, KOLATHUR, CHENNAI, TAMILNADU, INDIA - 600 099

**Bro. A. INNASIMUTHU**
TREASURER
PHONE : +91 98430 81234
ADDR : 3/1 KIRUBA ILLAM, SENIYAKUDI STREET, WATRAP, VIRUDHUNAGAR, TAMILNADU, INDIA - 626 132

**SENIOR MINISTER**
Pr. J. MATHEWS
Pr. J. J. LAZAR

**MEMBERS**
Pr. Y. Thaaveethu
Pr. Y. Babu Rajan
Pr. Baby Thomas
Pr. T. Christudhas
Pr. P. G. Roy
Pr. Jeyabalan J Devapitchai
Pr. Victor Joseph
Pr. Mariya Susai
Pr. D. Christudas
Pr. M. S. John Rathina Singh
Pr. G. George Ananth
Pr. Johnson. P. Daniel
Pr. Solomon Kennedy
Pr. Thomson Mathews
Pr. David Durai
Br. Enose
Br. Rajarethinam
Br. P. Simson
Br. B. Samson
Br. Raja Kani
Br. Sushil Kumar Mathews
Br. Gurumaran
Br. C. Jaya Zeba
Br. C. Eliza Darving Das
Br. B. Jenkins Bright
Br. M. John Moses Dayan
Br. John Chelliah Selvaraj
Br. Robert Vincent
Br. T. Katerasan

www.ipctn.in


TNS25-29/260402028 Date: 02/04/2026

**கர்த்தருக்கு ஸ்தோத்திரம்**

**இந்தியா பெந்தெகோஸ்தே தேவ சபை, தமிழ்நாடு**

**மாநில செயற்குழு கூடுகை - 18/03/2026**

2026 மார்ச் மாதம் 18-ம் தேதி காலை 10 மணி அளவில் தமிழ்நாடு மாநில தலைமையகத்தில் வைத்து தலைவர் **பாஸ்டர். கிங்ஸ்லி செல்லன்** தலைமையில், மூத்த போதகர்கள் நிர்வாக குழு உறுப்பினர்கள் முன்னிலையில் மாநில செயற்குழு நடைபெற்றது.

இச்செயற்குழுவில் மாநில இணை செயலாளர் **Bro. ரூபன்** அவர்கள் 118-ம் சங்கீதம் வாசிக்க மாநில உப தலைவர் **பாஸ்டர். சுந்தர் ராஜ் ஜாண்சன்** அவர்கள் ஜெபிக்க செயற்குழு இனிதே ஆரம்பமாயிற்று. மாநில தலைவர் நெகேமியா புஸ்தகத்திலிருந்து, 2-ம் அதிகாரம் 17, 18 - வசனங்கள்லிருந்து சில ஆலோசனைகள் வழங்கி முகவுரையாக **ஜெபத்தில் ஒன்றிணைவோம், தரிசனத்தை விதைப்போம், சீஷர்களை உருவாக்குவோம், பணியாளர்களை பயிற்றுவிப்போம், சபைகளை கட்டுவோம்** என செயற்குழுவை உற்சாகப் படுத்தினார்.

அதைத் தொடர்ந்து மாநில செயலாளர் **பாஸ்டர். சாலமோன்** அவர்கள் 2026 ஜனவரி மாதம் 22-ம் தேதி நடந்த செயற்குழுவில் நடந்த அறிக்கையை வாசித்து சமர்ப்பித்தார். அந்த அறிக்கையை மாநில செயற்குழு ஏக மனதாய் ஏற்றுக்கொண்டது.

அதை தொடர்ந்து மாநில பொருளாளர் **Bro. இன்னாசிமுத்து** அவர்கள் 08/12/2025 முதல் 15/03/2026 வரையுள்ள மாநில வரவு செலவு கணக்கினையும், 2026 ஜனவரி 22 - 25 வரை நடைபெற்ற மாநில கன்வென்ஷனுக்கான வரவு செலவு கணக்கினையும் வாசித்து சமர்ப்பித்தார்கள். மேலும் மாநில **தலைமையகத்தின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள பெயர்பலகை [Sign Board] மற்றும் அதில் வைக்கப்பட்டுள்ள சிலுவை** ஆகியவற்றை காணிக்கையாய் செய்த, மாநில இணை செயலாளர் **Bro. A. ரூபன்,** மாநில செயலாளர் **பாஸ்டர். சாலமோன்** ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார். செயற்குழுவும் இணைந்து நன்றி செலுத்தியது.

மேற்கூறிய செயற்குழு அறிக்கை மற்றும் வரவு செலவு கணக்கினை **Bro. ஏனோஸ்** அவர்கள் முன்மொழிய **Bro. சாம்சன்** அவர்கள் வழிமொழிய திருத்தமின்றி ஏகமனதாக செயற்குழு ஏற்றுக்கொண்டது.

1. **இரங்கல் தீர்மானம்: IPC கும்பகோணம் சென்டரின் உதவி தலைவராய் இருந்த பாஸ்டர். பொன்னுசாமி** அவர்களும் **செங்கல்பட்டு ஈஸ்ட் சென்டரின் உதவி தலைவராய் இருந்த பாஸ்டர். பவுலில்** அவர்களும் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள் என்பதை தெரிவித்து

அவர்களது குடும்பத்தாருக்காகவும் சபைகளுக்காகவும் மாநில இணை செயலாளர் **பாஸ்டர். ஜோய் அருள் ராஜ்** அவர்கள் ஜெபித்தார்கள்.

### 2. அங்கத்தினர் இணைப்பு சம்பந்தமாக :-

மாநில செயற்குழுவில் **கொடைக்கானல் சென்டருக்கு ஒதுக்கீடு செய்த போதகர் மற்றும் விசுவாசிக்கான இடங்கள்** பூர்த்தி செய்யப்படாத பட்சத்தில், தற்போது போதக உறுப்பினராக **பாஸ்டர். பாபுராஜன்** அவர்களும் **விசுவாசி உறுப்பினராக Bro. கதிரேசன்** அவர்களும் அதிகாரப் பூர்வமாக மாநில செயற்குழு உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதற்கான சான்றிதழை மூத்த போதகர் **பாஸ்டர். J. மேத்யூஸ்** அவர்கள் வழங்கினார்கள்.

பாஸ்டர். பிரகாஷ் வாழத்தோப்பில் அவர்கள் மாநில செயற்குழு உறுப்பினர் அங்கத்துவத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டபடியினால் அக்காலியிடத்தில் ஏற்கனவே செயற்குழு உறுப்பினர் அங்கத்துவத்திற்கு முன்மொழிவு செய்து காலியிடமில்லாமையால் தனது முன்மொழிவு கடிதத்தை திரும்பப் பெற்று கொண்ட **பாஸ்டர். ஜான் ரத்தினசிங்** அவர்களுக்கு வாய்ப்பளிக்கும் விதமாய் மாநில செயற்குழு அங்கத்துவம் வழங்கப்பட்டது. அதற்கான சான்றிதழும் வழங்கப்பட்டது.

### 3. மாநில வாரியங்கள் சம்பந்தமாக :-

#### a. நிர்வாகம் மற்றும் நற்சான்றிதழ் வாரியம்:

நிர்வாகம் மற்றும் நற்சான்றிதழ் வாரியத்தின் (Administrative and Credential Board) ஒருங்கிணைப்பாளராக (Convenor) **Pr. S. சாலமோன்** அவர்களும், இணை ஒருங்கிணைப்பாளர்களாக (Joint Convenors) **Br. A. ரூபன், Pr. தாம்சன் மேத்யூஸ், Pr. துரை, Pr. ஜான் சுரேஷ், Pr. ஜான் ரத்தின சிங்** மற்றும் Pr. ஏஞ்சல் ராஜா ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

#### b. சட்டம் மற்றும் நெருக்கடி மேலாண்மை வாரியம்:

சட்ட மற்றும் நெருக்கடி மேலாண்மை வாரியத்தின் ஒருங்கிணைப்பாளராக (Convenor) **Pr. S. சாலமோன்** அவர்களும், இணை ஒருங்கிணைப்பாளர்களாக (Joint Convenors) **Br. A. இன்னாசிமுத்து, Pr. பாபுராஜன், Pr. சாலமோன் கென்னடி, Br. சிம்சன், Br. சாம்சன், Br. ஜான் செல்லையா, Br. எலிசா டார்லிங் தாஸ்** மற்றும் **Adv. கனகராஜ்** ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

#### c. ஜெப மற்றும் பரிந்துரை வாரியம்:

ஜெப மற்றும் பரிந்துரை வாரியத்தின் (Prayer and Intercession Board) ஒருங்கிணைப்பாளராக (Convenor) **பாஸ்டர். ஜோய் அருள்ராஜ்** அவர்களும், இணை ஒருங்கிணைப்பாளர்களாக (Joint Convenors) **பாஸ்டர். ஜாண் ஜோசப்** (South Zone), **பாஸ்டர். விக்டர் ஜோசப்** (Centre Zone), **பாஸ்டர். பினி பிலிப்** (West Zone), **பாஸ்டர். டேவிட் துரை** (East Zone), **பாஸ்டர். சாக்கோ** மற்றும் **பாஸ்டர். மாதவன்** (North Zone) ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

#### d. நிதி மேலாண்மை வாரியம்:

நிதி வாரியத்தின் ஒருங்கிணைப்பாளராக **Bro. இன்னாசிமுத்து** அவர்களும், மாநில ஒருங்கிணைப்பாளர்களாக **பாஸ்டர். எட்வின்** (South Zone), **பாஸ்டர். K. N. ராஜேந்திர குமார்** (North Zone) ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். இவர்களுடன் இணை ஒருங்கிணைப்பாளர்களாக **பாஸ்டர். Y. ரூபன்** (East Zone), **பாஸ்டர். ஜாண்சன் P. டேனியல்** (North Zone), **பாஸ்டர் C. கிறிஸ்துதாஸ்** (West Zone), **பாஸ்டர். C. ராஜ்குமார்** (Centre Zone), **பாஸ்டர். P. ஜெப நேச குமார்** (South Zone) ஆகியோரும், உதவி இணை ஒருங்கிணைப்பாளர்களாக **Bro. அலன் யோசுவா** (North Zone)

**Bro. M. சுனில் குமார் மேத்யூ** (North Zone), **Bro. I. ஐசக், Bro. M. ஞான ஆனந்த்** (East Zone), **Bro. S. இருதய ராஜ் சாமி, Bro. M. ஜான் மோசஸ் தயாளன்** (East Zone), **Bro. தகனகராஜ், Bro. ஜீவானந்தம்** (Centre Zone), **Bro. T. K. ஜெயக்குமார் மற்றும் Bro. R. டேவிட்** (South Zone) ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

**e. கல்வி வாரியம்:-**

கல்வி வாரியத்தின் (Education Board) ஒருங்கிணைப்பாளராக (Convenor) **Br. A. ரூபன்** அவர்களும், இணை ஒருங்கிணைப்பாளர்களாக (Joint Convenors) **Pr. S. சாலமோன், Pr. தாம்சன் மேத்யூ, Pr. ஜோய் அருள்ராஜ், Pr. ஜான் ஜோசப், Dr. டேனியல், Pr. சாமுவேல் ஜோசப், Pr. ஜெயபாலன், Pr. விக்டர் ஜோசப்** மற்றும் **Mr. ஜான் பிரபு** ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

**f. கட்டிட நிர்மாண மற்றும் பராமரிப்பு வாரியம்:-**

கட்டிட நிர்மாண மற்றும் பராமரிப்பு வாரியத்தின் ஒருங்கிணைப்பாளராக (Convenor) **பாஸ்டர். C. சுந்தர்ராஜ் ஜான்சன்** அவர்களும், இணை ஒருங்கிணைப்பாளர்களாக (Joint Convenors) **Bro. ராஜரத்தினம், Bro. ரூபன் அடைக்கலம், Bro. சாம்சன், Bro. இன்னாசிமுத்து, Bro. செல்வகுமார்** மற்றும் **Bro. எலிசா** ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

**g. சுவிசேஷ பணி மற்றும் சபை வளர்ச்சி வாரியம்:**

சுவிசேஷ பணி மற்றும் சபை வளர்ச்சி வாரியத்தின் ஒருங்கிணைப்பாளராக (Convenor) **Pr. Dr. கிங்ஸ்லி செல்லன்** அவர்களும், இணை ஒருங்கிணைப்பாளர்களாக **Pr. Dr. கிறிஸ்துதாஸ்** (West Zone), **Pr. Dr. ஜான்சன் வர்கீஸ்** (East Zone), **Pr. ஜான் ரத்தினசிங்** (Central Zone), **Mr. ஜோசுவா ஜான்சன்** (North Zone) மற்றும் **பாஸ்டர் Dr. எட்வின் ஜெபராஜ்** (South Zone) ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். மேலும், சீஷத்துவப் பள்ளிகளின் ஒருங்கிணைப்பாளராக (Discipleship Schools Coordinator) **Mrs. குளோரி ஜான்சன்** அவர்களும், மிஷன் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளராக (Mission Institutes Coordinator) **பாஸ்டர் ஜான் சாமுவேல்** அவர்களும் நியமிக்கப்பட்டனர்.

**h. தர்ம சகாயம் மற்றும் நலவாழ்வு வாரியம்:**

தர்ம சகாயம் மற்றும் நலவாழ்வு வாரியத்தின் ஒருங்கிணைப்பாளராக (Convenor) **Bro. C. J. Zeba** அவர்களும், இணை ஒருங்கிணைப்பாளர்களாக (Joint Convenors) **பாஸ்டர். எபநேசர், பாஸ்டர். ஜார்ஜ் ஆனந்த், பாஸ்டர்.G. ஜெபராஜ், பாஸ்டர். கிறிஸ்பனோஸ், Bro. தயான், Bro. செல்வின் ஜோசுவா** மற்றும் **Sis. பியூலா ஜெபா** ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

**4. மாநில அலுவலக பொறுப்பாளர் சம்பந்தமாக (Office In charge) :-**

மாநில அலுவலகத்தில் தற்போது **சகோதரி D. தன்யா** அவர்கள் அலுவலக ஊழியராகவும், தலைமையக வளாகத்தின் கவனிப்பாளராக **சகோதரர் அற்புதராஜ் என்கிற சீனிவாசன்** அவர்களும் நியமிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

**5. கூடங்குளம் சென்டர் சம்பந்தமாக :-**

**கூடங்குளம் சென்டர் பெயரில் உள்ள வழக்குகள்** மற்றும் நீண்ட நாளைய தீர்மானங்கள் குறித்து **பாஸ்டர். எபிநேசர் சாமுவேல் ராஜ்** அவர்கள் விண்ணபத்தின் படி கலந்தாலோசிக்கப்பட்டது.

அதன்படி 1980-களில் IPC ஸ்தாபனத்திற்கு மாறாக பதிவு செய்யப்பட்ட பதிவுகளை ரத்து செய்யவும் சபைகளுக்குள் ஏற்பட்ட குழப்பங்களினிமித்தம் பதிவு செய்யப்பட்ட குற்றவியல் வழக்குகளை திரும்ப பெற அறிவுறுத்தவும் மாநில நிர்வாக பொறுப்பாளர்கள், மற்றும் சட்ட வாரிய அங்கத்தினர்கள் நேரில் பேசி முடிவு காணவும் தீர்மானிக்கப்பட்டது.

### 6. தலைமையக வளாக நில வழக்குகள் சம்பந்தமாக:-

நமது மாநில தலைமையக வளாகத்தில் **சில நில வழக்குகள் நிலுவையில் உள்ளது என்பதை மாநில நிர்வாக குழு அறிகிறது.** அவ்வழக்குகள் குறித்து ஆய்வு செய்ததன் பேரிலும் சம்பந்தப்பட்டவர்களை சந்தித்து பேசியதன் பேரிலும் **அவைகளை துரிதமாக நிறைவுக்கு கொண்டு வர வேண்டும்** எனவும் அதற்கான முயற்ச்சிகளை நிர்வாக குழு சார்பில் ஆவென செய்யவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

### 7. IPC-சபைகள் இணைப்பு சம்பந்தமாக:-

தமிழ்நாட்டில் முன் காலங்களில் IPC-யோடு இணைந்து செயல்பட்டு வந்த பல சபைகளும் தற்போது இணைந்து செயல்படாமல் **சுயாதீனமாக செயல்படுவதை** குறித்து விவாதிக்கப்பட்டது. அதன் பேரில் **அச்சபைகளை அருகாமையில் உள்ள சென்டர்களின் கண்காணிப்பிலோ, மாநில செயற்குழுவின் நேரடி கண்காணிப்பிலோ இணைத்து செயல்படுத்த** முனையும்படி மாநில நிர்வாக குழுவிற்கு அதிகாரம் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

### 8. கனகப்புரம் சபை சம்பந்தமாக :-

கனகப்புரம் சபையின் விசுவாசி **சகோதரர். ஐயா துரை** அவர்கள் IPC சபைக்கு விரோதமாய் அறக்கட்டளை நிறுவி சபையின் சொத்துக்களை அபகரிக்க முனைந்த போது அதை தடுத்து நிறுத்த நீதிமன்றம் மூலம் எடுக்கப்பட்ட முனைப்புகளுக்கு நன்றி செலுத்தி அதன் **செலவுகளில் ஒரு பகுதியை மாநில செயற்குழு பொறுப்பேற்கலாம்** என தீர்மானிக்கப்பட்டது.

மேலும் **சகோ. ஐயா துரை** அவர்களுக்கு விளக்கம் கேட்டு நடவடிக்கை எடுக்கும் படி தீர்மானிக்கப்பட்டது.

### 9. சுங்கான்கடை சபை சம்பந்தமாக :-

**நாகர்கோவில் சென்டருக்கு** உட்பட்ட **சுங்கான்கடை சபையில்** உபயோகிக்க முடியாத நிலையில் இருக்கிற நிலத்தை குறித்து சென்டர் மூலம் கேள்வி எழுப்பப்பட்ட போது அச்சபையின் முன்னாள் போதகர் **பாஸ்டர். மரிய செபாஸ்டின்** அவர்களை சந்தித்து அங்கு தேவையான முடிவுகளை நிர்வாக குழு எடுக்கும்படி அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது.

### 10. ஞாயிறு பள்ளி ஊழியங்கள் சம்பந்தமாக:-

ஞாயிறு பள்ளி ஊழியங்கள் சார்பில் ஞாயிறு பள்ளி அலுவலக பாடப்புத்தகங்களை பாதுகாக்கும் படி **கட்டிட அலமாரிகள் (Shelves)** ஏற்படுத்த கோரப்பட்டது. அதற்கு மாநில செயற்குழுவால் **பரிந்துரைக்கப்பட்ட தொகையை கொடுக்கும் படி தீர்மானிக்கப்பட்டது.** மேலும் ஞாயிறு பள்ளித் துறையின் முந்தைய செயற்குழுவின் **வரவு செலவுக் கணக்குகள்** மாநில பொது பேரவையில் சமர்ப்பிக்காத பட்சத்தில் அக்கணக்குகள் **உடனடியாக சமர்ப்பிக்க** கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

### 11. PYPA ஊழியங்கள் சம்பந்தமாக:-

PYPA - வாலிப துறை சார்பில் **மே மாதம்** நடத்தவிருக்கிற **வாலிபர் கூடுகைக்கு** அனுமதி கோரப்பட்டது. அதற்காக **அனுமதி வழங்கவும்** முந்தைய செயற்குழுவின் **வரவு செலவுக் கணக்குகள்** மாநில பொது பேரவையில் சமர்ப்பிக்காத பட்சத்தில் அக்கணக்குகள் **உடனடியாக சமர்ப்பிக்க** கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

### 12. பெண்கள் ஐக்கியத்தின் ஊழியங்கள் சம்மந்தமாக:-

**பெண்கள் ஐக்கிய துறை முந்தைய செயற்குழுவின் வரவு செலவுக் கணக்குகள் மாநில பொது பேரவையில் சமர்ப்பிக்காத பட்சத்தில் அக்கணக்குகள் உடனடியாக சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

### 13. ஸ்ரீவில்லிபுதூர் வேதாகம கல்லூரிக்கு NOC வழங்குவது சம்பந்தமாக:-

ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கேரளா வை சார்ந்த சிலரால் ஒரு வேதாகம கல்லூரி நடத்தப்பட்டு வருவதாகவும் அதற்கான அங்கீகாரம் வழங்க பொது செயற்குழுவிற்கு விண்ணப்பித்திருப்பதாகவும், பொது செயற்குழு மாநில செயற்குழுவின் NOC கோரியுள்ளது. ஆனால் குறிப்பிட்ட வேதாகம கல்லூரி நமது சபைகளுக்குள் **சில குளறுபடிகளை ஏற்படுத்துவதாக** நிர்வாக குழுவிற்கு வந்த தகவலின் பேரில் அதற்கான **NOC வழங்க இயலாது** என தீர்மானிக்கப்பட்டது.

### 14. Ms Joseph Tower கட்டிடப் பணிகள் சம்பந்தமாக:-

நமது தலைமையக வளாகத்திலுள்ள **Ms Joseph Tower கட்டிட வேலைகள்** கடந்த செயற்குழு காலகட்டத்தில் தீர்மானம் செய்து 6 அறைகள் ஜனவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது. **மீதமுள்ள 6 அறைகள் பூர்த்தி செய்ய** வாக்கு பண்ணினவர்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்ற கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. மேலும், நமது மாநில அலுவலகத்தில் வரவு செலவு கணக்குகளில் குறிக்கப்பட்டுள்ள தொகை கட்டுமான ஒப்பந்ததாரருக்கு கிடைக்கப்படவில்லை என புகார் எழுந்துள்ளது. அதை குறித்து முழுமையான **ஆய்வு** செய்து நடவடிக்கை எடுக்க நிர்வாக குழுவிற்கு அதிகாரம் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

### 15. Tamil Nadu Bible Seminary சம்பந்தமாக:-

நமது IPC தலைமையகத்தில் இயங்கி வருகிற **Tamil Nadu Bible seminaryக்கு** தங்கள் சபைகளிலுள்ள ஊழிய அழைப்பு பெற்ற வாலிபர்களை அனுப்பி வைக்க வேண்டுமெனவும், வரும் நாட்களில் **தமிழ்நாடு பைபிள் செமினாரியில்** அல்லது **ஐபிசி அங்கீகாரம் பெற்றதில்** படிக்காதவர்கள் தமிழ்நாடு ஊழியங்களில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 16. சென்டர் காணிக்கைகள் தொடர்பாக:-

சென்டர்களுக்கு நியமிக்க பட்டிருக்கிற காணிக்கையை **பிரதி மாதம் 15ம் தேதிக்குள்** அனுப்பி வைத்து **பொருளாளரிடமிருந்து ரசீதைபெற்று கொள்ளும்படி** கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### 17. தலைமை அலுவலகத்திலிருந்து வரும் கடிதம் தொடர்பாக :

தலைமை அலுவலகத்திலிருந்து வரும் தகவல்களை **சபை ஆராதனைகளில் கட்டாயமாக அறிவிக்கப்படவும்,** அதைத் தொடர்ந்து சபை தகவல் பலகையில் ஒட்டி வைக்கவும் கேட்டுக்கொள்ளபடுகிறது.

### 18. ஒத்துழைப்பு சம்பந்தமாக:-

தமிழ்நாடு IPC சபைகளுக்குப்பட்ட எல்லா **பொதுவான ஊழியங்கள், கன்வெ‌ன்ஷன், PYPA meetings, Sundays school Programs, பெண்கள் கூடுகை, ஊழியர் கருத்தரங்கு etc.** ஆகியவற்றில் ஊழியர்கள், பொறுப்பாளர்கள், விசுவாசிகள் அனைவரும் **முழு ஒத்துழைப்பு கொடுத்து கட்டாயமாக** பங்குகொள்ளுவது என அறிவுறுத்தபடுகிறது.

### 19. சோலார் மின் சக்தி ஏற்படுத்துவது சம்பந்தமாக:-

நமது தலைமையக வளாகத்தில் **ஒரு பெருந்தொகை மின் இணைப்புக்காக வழங்க வேண்டியிருப்பதால்** சோலார் மின் சக்தி ஏற்படுத்தினால் **தரமாய் லாபகரமாக இருக்குமானால்** அதற்குறிய ஏற்பாடுகளை செய்ய நிர்வாக குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**20. துறைமங்கலம் சபை கட்டுமானம் சம்பந்தமாக:-**

**திருச்சி சென்டருக்கு** உட்பட்ட **துறைமங்கலம்** பகுதியில் **Bro. மாரிமுத்து** என்பவர் அவர்கள் IPC சபை கட்டுவதற்கு கொடுத்த இடத்தில், **சபை கட்டுவதற்கென முன்னாள் செயற்குழுவால் கொடுக்கப்பட்ட பணம் அச்சபை கட்ட உபயோகிக்கப்படாத பட்சத்தில் அதை குறித்து விசாரித்து ஆவென செய்யும்படி** நிர்வாக குழுவிற்கு அதிகாரம் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

**21. செயற்குழு உறுப்பினர் Bro. திரீசன் சம்பந்தமாக:-**

நமது மாநில பொது பேரவை மற்றும் தேர்தலில் முந்திய செயற்குழுவால் ஏற்படுத்தப்பட்டதும், நமது சட்ட புத்தகத்திற்கு உட்பட்டதுமான நிபந்தனைகளுக்கு மாறாக பொய்யான தகவல்களை தேர்தல் அதிகாரிக்கு பகிர்ந்து **ஓட்டுரிமை எந்த சபையிலிருந்தும் பரிந்துரை செய்யப்படாத** பட்சத்தில் நமது முன்னாள் அலுவலக பொறுப்பாளர்களால் **எந்த ஆவணங்களும் இல்லாமல் ஓட்டுரிமை வழங்கப்பட்டு மாநில செயற்குழுவிற்கு Bro. திரீசன் முன்மொழியப்பட்டிருக்கிறார்** என்பது தற்போது தெரிய வந்துள்ளமையால் **செயற்குழுவில் அங்கத்துவம் வகிப்பதற்கு தகுதியற்றவர் என செயற்குழுவால் ஏக மனதாய் தீர்மானிக்கப்பட்டது.**

**பின்பு மூத்த போதகர் J. மேத்யூஸ் அவர்கள் ஜெபித்து ஆசீர்வதிக்க கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.**

# நிர்வாகக் குழு (குருமன்றக் கூடுகை)

**நாள்: 18/3/2026 | நேரம்: 5.00 pm**

2026 மார்ச் மாதம் 18-ம் தேதி மாலை 5 மணி அளவில் தமிழ்நாடு மாநில தலைமையகத்தில் வைத்து தலைவர் **பாஸ்டர். கிங்ஸ்லி செல்லன்** தலைமையில், நிர்வாக குழு உறுப்பினர்கள் செயற்குழு போதக அங்கத்தினர் முன்னிலையில் மாநில குருமன்ற கூடுகை நடைபெற்றது.

இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு,

1. **சென்னை மண்ணூர் பேட்டை** IPC சபை ஊழியர் **பாஸ்டர். ஜாண் செரிலோ** அவர்களை **வத்ராப் சென்டருக்கு உட்பட்ட கம்மத்துப்பட்டி** சபைக்கு இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

2. **சென்னை மண்ணூர் பேட்டை** சபைக்கு **கொடைக்கானல் சென்டருக்கு உட்பட்ட பாஸ்டர். ஜாண் ரோஸ்** அவர்களை இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

3. **வத்ராப் சென்டர் கம்மத்துப்பட்டி** சபையில் ஊழியம் செய்யும் **பாஸ்டர். பெஞ்சமின் பிரபு** அவர்களை **வத்ராப் சென்டருக்குட்பட்ட அழகாபுரி** சபைக்கு இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

4. **வத்ராப் சென்டர் கோட்டையூர் பாஸ்டர் சாமுவேல். C** அவர்களை **கொடைக்கானல் சென்டருக்கு உட்பட்ட பள்ளப்பட்டி** சபைக்கு இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

5. **வத்ராப் சென்டருக்கு உட்பட்ட அழகாபுரி** சபையில் ஊழியம் செய்யும் **பாஸ்டர். சத்தியராஜ்** அவர்களை, **வத்ராப் சென்டர் உட்பட்ட கோட்டையூர்** சபைக்கு இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

6. **சென்னை சென்ட்ரல் District-க்கு** உட்பட்ட **IPC பிலதெல்பியா அஸம்பிளி பாடி** சபை போதகர் **பாஸ்டர். ஜோய்ஸ் ஆபிரகாம் கேரளாவிற்கு** இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

7. **கேரளா, கோட்டயம், தலையோலபரம்பு IPC எபிநேசர்** சபை போதகர் **பாஸ்டர். விஜி தோமஸ்** அவர்கள் **சென்னை சென்ட்ரல் டிஸ்ட்ரிக்ட்டுக்கு** உட்பட்ட **IPC பிலதெல்பியா அஸம்பிளி பாடி** சபைக்கு இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

8. **மேல்பாரை** சபை போதகர் **பாஸ்டர். யோனத்தான்** அவர்கள் **நெசவாளர் காலனி** சபைக்கு இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

9. **நாகர்கோவில் சென்டருக்கு** உட்பட்ட **ராஜ் நகர்** சபை போதகர் **பாஸ்டர். ஜெயராஜ்** அவர்கள் **மேல்பாரை** சபைக்கு இடமாற்றம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

10. **நெசவாளர் காலனி** சபை போதகர் **பாஸ்டர். எபிநேசர்** அவர்களை **ராஜ் நகர்** சபைக்கு இடமாற்றம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

11. நமது IPC சபையின் சட்ட விதிகள் **Article 14 Section II - 1-ல்** குறிப்பிட்டுள்ளபடி **IPC க்கு சொந்தமான சபைகளில் இருக்கிற ஊழியர்களை 4 - ஆண்டுகளுக்கு ஒரு முறை இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற விதிகளுக்குட்பட்டு, வரும் நாட்களில் இடமாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.**

12. புதிய பணித்தள இடங்களை துவங்குகிற ஊழியர்கள் நமது **IPC சட்ட புத்தக விதிமுறைகளுக்கு உட்பட்டு IPC அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.** மேலும் அவ்விதம் ஊழியஞ் செய்யும் ஊழியர்களுக்கு **மாதாந்திர ஊக்கத்தொகை** வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

13. நமது தமிழ்நாடு IPC சபைகளுக்கு **சொந்தமான சொத்துக்கள்** பல இடங்களில் கையகப்படுத்தப்பட்டு **சொந்த உபயோகத்திற்காக உபயோகித்து வருவதை குறித்து** விவாதிக்கப்பட்டது. அவ்விதமுள்ள சொத்துக்களை **IPCக்கு சொந்தமாக்கிக் கொள்ள** வேண்டிய நடவடிக்கை எடுக்க நிர்வாக குழுவிற்கு அதிகாரம் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

பாஸ்டர் கிறிஸ்து தாஸ் அவர்கள் ஜெபிக்க பாஸ்டர் ஜாய் அருள்ராஜ் அவர்கள் ஆசீர்வாதம் கூற கூட்டம் இனிதே நிறைவெறியது.

# அவசர ஆலோசனை கூடுகை

**நாள்: 24/03/2026 | நேரம்: 8:30 pm | தளம்: Google Meet**

2026 மார்ச் 24-ம் தேதி மாலை 8.30 மணியளவில் **Google Meet** தளத்தில் மாநில தலைவர் **பாஸ்டர். கிங்ஸ்லி செல்லன்** தலைமையில் அவசர ஆலோசனை கூடுகை நடைபெற்றது. இக்கூடுகையில் 27 நபர்கள் கலந்துகொண்டார்கள்.

இக்கூடுகையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு :-

1. நமது மாநில அலுவலக பொறுப்பாளராக செயல்பட்டு வந்த **பாஸ்டர். புஸ்பராஜ்** அவர்கள் தனது பணியை நிவிர்த்தி செய்யாமல் எந்த வித தகவலுமில்லாமல் தலைமையக வளாகத்திலிருந்து வளாகத்தை விட்டு தனது பொருட்களுடன் வெளியேறி விட்டார். அதற்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில 20/3/2026 **அன்று இரவு 11 - மணிக்கு மேல்** தலைவர் மற்றும் செயலாளரை அழைத்து **தகாத வார்த்தைகளாலும், ஒருமையிலும், மிரட்டல் தொனியிலும் மதுபோதையிலும் பேசியது** குறித்து மாநில செயற்குழுவில் விவாதிக்கபட்டது. **இதில் Article XII Section V, Section VI அடிப்படையிலும் Article V Section IV Section V** அடிப்படையிலும் தனது IPCயின் **அடிப்படை உறுப்பினர் தகுதியையும் போதக அபிஷேகம் மற்றும் போதக அங்கீகார தகுதியையும் ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.** மேலும் செயலாளரை தனிப்பட்ட முறையில் மன உளைச்சல் ஏற்படுத்தும் விதமாய் கெட்ட வார்த்தைகளை பயன்படுத்தியபடியால் அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரம் வழங்கப்பட்டது.

2. **திருச்சி டோல் கேட் சபையில் ஊழியம் செய்யும் பாஸ்டர். பிரகாஷ் வாழத்தோப்பில்** அவர்கள் IPC சட்ட புத்தகம் விதிகள் **Article XII Section IV ஆகிய விதிகளின் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் பின்வருவன அடங்கும்.**

### i. ஊழிய அவமதிப்பு (Ministerial Discourtesy)

இது ஒரு ஊழியர் சக ஊழியர்களிடமோ, சபை நிர்வாகிகளிடமோ அல்லது விசுவாசிகளிடமோ நடந்து கொள்ளும் **தவறான கண்ணியமற்ற முறையைக்** குறிக்கிறது.

- **அதிகாரத்தை மீறுதல்:** தனக்கு மேலுள்ள அதிகாரிகளுக்கு (உதாரணமாக மாநில அல்லது மாவட்ட போதகர்) கீழ்ப்படியாமல் இருத்தல்.
- **மரியாதையற்ற பேச்சு:** பொது இடங்களிலோ அல்லது சபைக் கூட்டங்களிலோ தலைவர்களைக் கண்ணியக்குறைவாகப் பேசுவது.
- **ஒழுக்கமின்மை:** ஒரு ஊழியருக்குரிய நற்பண்புகள் இல்லாமல், கோபத்தையோ அல்லது கசப்பையோ ஊழியத்தில் வெளிப்படுத்துவது.

### ii. சபைக்குள் பிரிவினையை உண்டாக்குதல் (Causing Dissension)

சபையின் ஒற்றுமையைக் குலைக்கும் செயல்கள் இதில் அடங்கும். இது ஒரு கடுமையான குற்றமாகக் கருதப்படுகிறது, ஏனெனில் இது சபையின் வளர்ச்சியைப் பாதிக்கிறது.

- **குழுக்களை உருவாக்குதல்:** சபைக்குள் ஒரு குறிப்பிட்ட பிரிவினரை மட்டும் தனியாகத் திரட்டி, நிர்வாகத்திற்கு எதிராகத் தூண்டிவிடுதல்.

- **குழப்பம் விளைவித்தல்:** சபை முடிவுகளைத் தவறாகச் சித்திரரித்து விசுவாசிகள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்துதல்.
- **சபை உடைப்பு:** சபையைப் பிரித்துக்கொண்டு தனியாகச் செல்ல முயற்சிப்பது, சபையின் அமைதியைக் கெடுக்கும் வகையில் செயல்படுவது.

### iii. அவதூறு பரப்புதல் (Slander)

தனிநபர்கள் அல்லது சபையின் தலைமையைப் பற்றித் தவறான தகவல்களைப் பரப்பி அவர்களின் நற்பெயரைக் கெடுக்கும் செயல்கள் இதில் அடங்கும்.

- **நற்பெயருக்குக் களங்கம்:** சபையின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் பொது இடங்களிலோ பேசுவது.
- **தலைமையை இழிவுபடுத்துதல்:** நிர்வாகத்தின் நற்பெயரைக் குறைக்கும் நோக்கில் உள்நோக்கத்துடன் செயல்படுவது.

மேற்கூறியவை மட்டுமல்லாது, இவை தவிர இன்னும் பல விதிமீறல்களும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

ஆகியவைகளால் தகுந்த ஆதாரங்களோடு குற்றம் சுமத்தப்பட்டபடியால் இடைக்கால பணி நீக்கமும் விளக்கம் கேட்டு கடிதம் எழுத தீர்மானிக்கப்பட்டது.

**இறுதியில் பாஸ்டர். ஜாய் அருள்ராஜ் அவர்கள் ஜெபித்து ஆசீர்வாதம் கூற கூட்டம் இனிதே நிறைவெறியது.**

**உங்கள் சேவைக்காக,**

Pr. S. **சாலமோன்**
இந்தியா பெந்தெகொஸ்தே தேவசபை
தமிழ்நாடு மாநில செயலாளர்
+91 94431 95225